சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அ.வ.எண்.155/2019

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. தினேஷ் குமார், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலையரசு | வயது | 50 |
| த/பெ | இரங்கசாமி | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | திம்மம்பாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | விவசாயி |

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை** :

தாவா சொத்துக்கள் 15.04.1999 அன்று பதிவு செய்யப்பட்ட பாக பிரிவினை ஆவணத்தில் அடங்கிய சொத்துக்கள் என்றால் சரி தான். அந்த பாக பிரிவினை ஆவணம் நான், 1 மற்றும் 2 பிரதிவாதிகள், எனது தகப்பனாரான 1 ஆம் வாதி மற்றும் எனது தாயார் சுந்தரம்மாள் ஆகியோர்களுக்கு இடையே ஏற்பட்டது என்றால் சரி தான். பிராது 1 வது இலக்க சொத்து மேற்கண்ட பாக ஆவணத்தில் எனது தாயார் சுந்தரம்மாளுக்கு சி தபசில் சொத்தாக ஒதுக்கப்பட்டது என்றால் சரி தான். பிராது 2 வது இலக்க சொத்து எனது தகப்பனாருக்கு ஏ தபசில் சொத்தாக ஒதுக்கப்பட்டது என்றால் சரி தான். தாவா சொத்துக்கள் எங்கள் குடும்பத்திற்கு பூர்வீகமாகவும் எனது அப்பா கிரையமாகவும் பெற்ற சொத்துக்கள் என்றால் சரி தான். எனது அப்பா 13.04.1970 அன்று கிரையம் பெற்ற சொத்துக்களும் அந்த பாக ஆவணத்தில் அடங்கும் என்றால் சரி தான். அந்த பூர்வீக சொத்துக்களை பொதுவாக நிர்வாகம் செய்து அனுபவித்து வந்தோம் என்றால் எனது அப்பா தான் நிர்வாகம் செய்து வந்தார். பிராது 1 வது இலக்க சொத்து 80 செண்ட் விஸ்தீரணம் கொண்டது

என்றால் சரி தான். பிராது 2 வது இலக்க சொத்து 23 செண்ட் விஸ்தீரணம் கொண்டது என்றால் சரி தான். பிராது 2 வது இலக்க சொத்தை தான் எனது அப்பா 1970 ஆம் ஆண்டில் கிரையம் பெற்றார் என்றால் சரி தான். நாங்கள் செய்து கொண்ட பாகத்தில் எனக்கு எவ்வளவு சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் பி தபசிலாக புல எண்.994/3 ல் 2.25 அல்லது 2.50 ஏக்கர், புல எண். 993 ல் உள்ள பல உட் பிரிவுகளில் 1 ஏக்கர் ஆகியவை ஒதுக்கப்பட்டது. எனது சகோதரிகளான பிரதிவாதிகளுக்கு பாக பிரிவினையில் என்ன சொத்து ஒதுக்கினோம் என்றால் அவர் தனக்கு சொத்து எதுவும் வேண்டாம் எனவும் பணம் மட்டுமே போதும் என்று சொன்னதால் அவருக்கு D மற்றும் E தபசிலாக இரண்டு சகோதரிகளுக்கும் தலா ரூ. 20,000/- கொடுத்தோம். அப்போது எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் மதிப்பு ரூ.18,137.75/- ஆகும். எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் தற்போதைய மதிப்பு எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. 1999 ஆம் ஆண்டு எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் மதிப்பு எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. பிராதில் தாவா சொத்துக்களின் மதிப்பு வழி காட்டி மதிப்பு அடிப்படையில் கூறப்பட்டு உள்ளது என்றால் சரி தான். தற்போது என்னுடைய சொத்தின் வழி காட்டி மதிப்பு எவ்வளவு என்றால் தெரியாது. தாவா சொத்தின் வழி காட்டி மதிப்பை தாக்கல் செய்ய வேண்டும் என்று தெரியுமா என்றால் தெரியாது. 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு கொடுத்த தலா ரூ. 20,000/- தற்போது எவ்வளவு மதிப்பு இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தங்களுக்கு சொத்து வேண்டாம் எனவும் அதற்கு பதிலாக பணம் தான் வேண்டும் என்று கூறியதாக வா.சா.ஆ.3 பாக ஆவணத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளதா என்றால் உள்ளது.

( பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது )

| |
|---|
| மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது. |

ஒம்/- கா. கெங்காராஜ்.

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.